# பண்பான நண்பன்

கலாநிதி சு. வித்தியானந்தன், M. A., Ph. D.
பேராசிரியரும் தமிழ்த்துறைத் தலைவரும்,
இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகம்.

☆

இன்றைக்கு 34 ஆண்டுகளுக்குமுன் நடந்தவற்றை எண்ணிப் பார்க்கின்றேன். நான் இலங்கைப் பல்கலைக் கழகத்திற் படித்த காலம்— என்து ஆசான் பேராசிரியர் கணபதிப்பிள்ளையிடம் தமிழைச் சிறப்புப் பாடமாகப் படித்த காலம். பேராசிரியரின் பம்பலப்பிட்டி இல்லத்திற்குப் பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் மாலைப் பொழுதில் நான் போவது வழக்கம். அங்குதான் திரு. மயில்வாகனம் அவர்களை முதன் முதற் சந்தித்தேன். பேராசான் கணபதிப்பிள்ளை, மயில்வாகனத்தின் தங்கையை - மட்டக்களப்பிற் பிரபல வழக்கறிஞராக விளங்கிய தர்மலிங்கம் அவர்களின் மகளை – தமது வாழ்க்கைத் துணையாக ஏற்று வாழ்க்கை நடத்திய காலமது.

மயில்வாகனம் அப்போது சட்டக் கல்லூரியில் மாணவனாகப் பயின்றுவந்தார். பேராசிரியர் இல்லத்திலிருந்தே சட்டக் கல்லூரிக்குப்

போய்வருவார். நான் அவரைச் சந்திக்க முன்னரே பல்கலைக் கழகத்திற் பயின்று, இந்திய வரலாற்றின் சிறப்புக்கலைமாணிப் பட்டம் பெற்று விட்டார். பல்கலைக் கழகத்தில் மாணவரால் நன்கு மதிக்கப்பட்டு, மாணவ சங்கத்தின் செயலாளராகப் பணிசெய்து பல அரிய திட்டங்களைச் செயற்படுத்தினர். சில காலம் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும் கடமையாற்றினர்.

நானும் இந்திய வரலாற்றைத் துணைப்பாடமாகப் பயின்றதனால், எமது உரையாடல்கள் பல்கலைக்சழக விரிவுரைகள், ஆசிரியர்கள், இந்திய வரலாறு முதலியன பற்றி அமையும். அவ்வுரையாடல்களின் போது வரலாற்றுக் கண்ணோட்டத்தில் எப்பிரச்சினையையும் நோக்கும் பண்பினை அவதானிக்க முடிந்தது. அவர் விரும்பியிருந்தாற் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையிலே தொடர்ந்து பணியாற்றியிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் நாம் சிறந்ததொரு வரலாற்றுப் பேராசிரியரையும் பெற்றிருப்போம்.

ஆனல் அவர் தமது தகப்பனின் துறையிலேயே தாமும் புக விரும்பினர். இதனற் சட்டக் கல்வியிற் சிறப்புச் சித்தியெய்தி அப்புக்காத்தாக 1943இல் வெளியேறினர். தகப்பன் இல்லாது தவித்துக் கொண்டிருந்த சகோதரங்களைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு அப்போது அவருக்கிருந்ததனற் சில காலம் மட்டக்களப்பில் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியாகக் கடமையாற்றினர். ஆனல், நீண்டகாலம் அரசாங்க உத்தியோகம் பார்க்க அவர் விரும்பவில்லை. எனவே 1948ல், தந்தையின் வாரிசாக, அவரின் தொழிலையே தமது தொழிலாகக் கொண்டு, இறக்கும்வரை சட்டத்தரணியாகத் தொழில் செய்து 26 ஆண்டுகளாகத் தலைசிறந்த வழக்கறிஞராக விளங்கினர். உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருந்தபோது அவர் பெற்ற அனுபவம், பிற்காலத்தில் உணவு உற்பத்தியிற் பெருமூக்கத்துடன் ஈடுபட அவருக்கு உறுதுணையாக இருந்தது.

நான் மட்டக்களப்புக்கு ஒவ்வோராண்டும் பல தடவை செல்வதுண்டு. இதனற் பலர் என்னை மட்டக்களப்பு வாசி எனக்கொண்டதுமுண்டு. அவ்வாறு செல்லும் போதெல்லாம் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அச்சந்திப்புக்களின் போது மட்டக்களப்பு வரலாறு, தமிழரின் எதிர் காலம், மட்டக்களப்பின் முன்னேற்றம் முதலியனபற்றி உரையாடுவோம். இப்பொருள்களைப் பற்றி அவர் தெரிவித்த அபிப்பிராயங்கள், மட்டக்களப்புத் தமிழரின் பொருளாதார அரசியல் அபிவிருத்தி பற்றி அவர் தந்த விளக்கங்கள் எமக்கு அவர் மீதிருந்த மதிப்பைப் பல மடங்கு அதிகரித்தது. அவரை மட்டக்களப்பு மக்கள் தமது பாராளு மன்ற உறுப்பினராகப் பெற்றிருந்தால், மட்டக்களப்புப் பல துறையில் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கும். ஆனல், தகுதியுடையவர்களுக்கு, சிந்தனைச் சிற்பிகளுக்கு, சிறந்த அரசியல் ஞானிகளுக்கு பாராளுமன்றத்தில் இடமேது? அரசியலில் இறங்கித் தோல்விகண்டதும், அதனைப் பெருமனதுடன் ஏற்று, அரசியலிலிருந்து ஒதுங்கி, விவசாயத்தில் ஈடுபட்டு நாட்டு வளத்தினைப்

பெருக்குவதற்குப் பெரிதும் முயன்ருர். அவர் அரசியலைத் துறந்தது தமிழ் மக்களின் துர்ப்பாக்கியமே.

அவரைப் பற்றி நினைக்கும்போது மண்டூர் முருகன் கோயிலுக்குச் சென்றது மனக்கண் முன் தோன்றும். எமது தயாரிப்பான நாட்டுக் கூத்து ஒன்று மட்டக்களப்பில் மேடையேற்றப்பட்டபோது, எமது மனைவியார் மண்டூர் முருகனைத் தரிசிக்க விரும்பினுர். மயில்வாகனம் அவர்களும் அவர் மனைவியும் எம்மைத் தமது மோட்டார் வண்டியில் அழைத்துச் சென்றனர். ஆனல், மயில்வாகனத்தின் வாகனத்தில் சென்ற போதும், மண்டூர் மயில்வாகனனின் கோயில் வரை அவ் வாகனத்திற் போகும் பாக்கியம் கிடைக்கவில்லை. காரணம், இடை வழியில் மோட்டார் வாகனம் போக முடியாது தெரு சேதம் அடைந் திருந்தது. அப்படியிருந்தும், இருவரும் எம்முடன் நடந்து சென்று ஆவன செய்தனர். அப்போது அவரது பொறுமையையும் சாந்த மனப்பான்மையையும் அவர் மனைவியின் ஒத்தாசையையும் கண்டு வியந்தோம். இருவரும் உண்மையிற் சிறந்த பண்பாளர்.

பொறுப்புணர்ச்சி மிகுந்தவர் மயில்வாகனம். தலைப்பிள்ளை குடும்ப பாரத்தை அலட்சியம் செய்யாது, தம்பிமாரையும் தங்கை மாரையும் நல்வழிப்படுத்தி வந்ததனுலேயே அவர்கள் யாவரும் நல்ல நிலையில் இருக்கின்ருர்கள். பேராசிரியரின் பிள்ளைகளின் விஷயங்களைப் பற்றிக் கலந்தாலோசிக்கும் போதெல்லாம் பொறுப்புணர்ச்சியோடும் அனுதாபத்தோடும் ஆலோசனைகள் கூறுவார். அவரின் அகால மரணம் அவர்களுக்கெல்லாம் ஈடுசெய்ய முடியாத இழப்பு.

மயில்வாகனம் அவர்கள் அன்பின் வழி உயிர் நின்ற உடம்புடன் கூடி வாழ்ந்தவர்; சொல்லிலோ செயலிலோ பிறர் நோக நடந்தறியாத வர். மற்றவர்களுடன் சோலிக்குச் செல்லாதவர்; பெருமைசேர் மாண் பினர்; சிறுமை சேராச் சால்பினர். அத்தகைய பெருந்தகையை இறை வன் திடீரெனத் தமது திருவடியில் அணைத்துக் கொண்டார்.

ஆண்டவன் வகுத்தபடியே யாவும் நடைபெறுகின்றன. ஆயினும், மயில்வாகனம் அவர்களையே தமது உயிராகக் கொண்ட அவரின் வாழ்க்கைத் துணைக்கு யார் கைகொடுப்பார்? அவரின் மனைவிளக்காகப் பிரகாசித்து, மனையை மாட்சிமைப் படுத்தி, அவருக்குக் கையொடுத் துதவிய இல்லாள் இப்போது தன்னந் தனியளாகத் தவிக்கின்ருர். அவருக்கும், படிக்கும் காலத்திலேயே தகப்பனைப் பறிகொடுத்து ஏங்கி யிருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் இறைவனே நல்வழி வகுத்து அருளு வார். காரணம், நன்மைக்கு அழிவில்லை.

தமிழினம் ஒரு சிறந்த சமூகத்தொண்டனை, பரந்த அரசியல் ஞானம் பெற்ற பெருமகனை இழந்து நிற்கின்றது. நாம் பண்பான நண்பனை இழந்து விட்டோம்.